செ. வெ.எண் 663

# செய்தி வெளியீடு–14.8.2008

## தமிழக காவல் துறையின்

## 5 அதிகாரிகளுக்கு சமூக சேவைக்கான காவல் சிறப்புப் பணிப்பதக்கங்கள்!

## 10 அதிகாரிகளுக்கு காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப் பணிப்பதக்கங்கள்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

இந்திய சுதந்திர தினத்தையொட்டி, காவல் துறையில் சிறப்பாகப் பணிபுரிந்திடும் காவல் துறை அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் தமிழக முதலமைச்சரின் சிறப்புப் பணிப்பதக்கங்கள் வழங்கி ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, 2008 ஆம் ஆண்டு காவல் துறையில் தனித்துப் பொறுப்பேற்று, பணியில் திறமை, உறுதி, மற்றும் அக்கறையுடன் தன்னிகரற்று விளங்கி, சமூக சேவையில் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர்களான சென்னை நுண்ணறிவு காவல்துறைத்தலைவர் திரு.எம்.எஸ். ஜாபர் சேட், இ.கா.ப., சென்னை தமிழ்நாடு அதிரடிப்படைப் பயிற்சிப் பள்ளி துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ். ஆசிர் விஜயகுமார், சேலம் மாவட்ட கியூ பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை காவல் ஆய்வாளர் திரு. எஸ். ராஜாகாளீஸ்வரன், காஞ்சிபுரம் மாவட்ட காவல் உதவி ஆய்வாளர் திரு. ஆர். சீனிவாசன், கோவை மாவட்ட இருப்புப் பாதை காவல் நிலைய தலைமைக் காவலர் 546 திரு. பி. முத்து ஆகிய 5 காவல் அதிகாரிகளுக்கு தமிழக முதலமைச்சரின் சமூக சேவைக்கான காவல் சிறப்புப் பணிப் பதக்கங்களையும்;

அதுபோலவே, புலன் விசாரணைப் பணியில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியவர்களின் சிறந்த மதிநுட்பம், ஆர்வம், திறமை, கடின உழைப்பு ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில் கரூர் மாவட்டம், மதுவிலக்கு அமுலாக்கப் பிரிவில் பணிபுரியும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. எஸ்.நிசாமுதீன், சென்னை குற்றப் புலனாய்வுத் துறை கியூ பிரிவில் பணிபுரியும்

துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு. எஸ். மகேஸ்வரன், கன்னியாகுமரி மாவட்ட நாகர்கோவில் உட்கோட்டத்தின் துணைக் கண்காணிப்பாளர் திரு. எம். சந்திரபால், சென்னை காவல் ஆய்வாளர் திரு. பி. செந்தில்குமார், காவல் உதவி ஆய்வாளர் திரு. ஜி. வெங்கடேசன், சென்னை மத்திய குற்றப் பிரிவு காவல் ஆய்வாளர் திரு. கே. பிரதீப், நாமக்கல் மாவட்ட குற்றப் புலனாய்வுத் துறை காவல் ஆய்வாளர் திரு. எம். ராஜன், கோவை மாவட்ட காவல் ஆய்வாளர் திரு. கே. மணி, தஞ்சை மாவட்ட மதுவிலக்கு அமுலாக்கப் பிரிவு, காவல் ஆய்வாளர் திரு. எம். தமிழ்ச்செல்வன், கடலூர் மாவட்டம் அண்ணாமலைநகர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.டி. கண்ணன் ஆகிய 10 காவல் அதிகாரிகளுக்குத் தமிழக முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப் பணிப் பதக்கங்களையும் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த இரண்டு விருதுகளையும் பெறும் 15 காவல் அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுள்ள தங்கப் பதக்கத்துடன், 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் பின்னர் நடைபெறும் ஒரு விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வழங்கப்படும்.

***

2/2

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9